செ.வெ. எண்: 160

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 11.11.2011

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், ஊரப்பாக்கம் - கிளாம்பாக்கம் கிராமத்தில், **9.11.2011** அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த செஞ்சி வட்டம், கண்டமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெகநாதன் என்பவரின் மகன் திரு. ராஜேஷ் சம்பவ இடத்திலும், மற்றும் தாம்பரம் வட்டம், பீர்கன்கரணை கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமசாமி என்பவரின் மகன் திரு. முத்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த திரு. ராஜேஷ் மற்றும் திரு. முத்து ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவத்தில் காலமான திரு. ராஜேஷ் மற்றும் திரு. முத்து ஆகியோரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்:
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை